முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2022 யூலை

## (103) பொருளியல்

(Economics)

2022-08-27
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் பொருளாதாரமற்ற வளமொன்றிற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) உணவு (2) உறைவிடம் (3) கட்டடம் (4) சூரிய ஒளி

**1.2** கீழ்வருவனவற்றுள் கேள்வி வளையி இடப்புறமாக நகர்வதற்கான ஒரு காரணமாக **அமையாதது** எது?

(1) பிரதியீட்டுப் பொருள்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.

(2) நுகர்வோரது வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி.

(3) பொருளின் விலை எதிர்காலத்தில் குறைவடையும் என்ற எதிர்பார்ப்பு.

(4) குறைநிரப்புப் (complementary) பொருள்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு

**1.3** குறிப்பிட்ட பண்டமொன்றின் விலை ரூபா 10/- இலிருந்து ரூபா 12/- ஆக அதிகரிக்கும்போது கேள்விக் கணியம் மாற்றமடையவில்லை. இந்தப் பண்டத்தின் கேள்வி விலை நெகிழ்ச்சி :

(1) பூரண நெகிழ்ச்சியற்றது. (2) ஒப்பீட்டளவில் நெகிழ்ச்சியானது.

(3) ஒற்றை நெகிழ்ச்சியானது. (4) பூரண நெகிழ்ச்சியானது.

**1.4** குறுங்கால உற்பத்திச் செயன்முறை தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவு செய்க :

(1) நிலையான காரணி உள்ளீடுகள் இல்லை.

(2) நிலையான காரணி உள்ளீடுகளும் மாறும் காரணி உள்ளீடுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

(3) சகல காரணி உள்ளீடுகளும் நிலையான காரணி உள்ளீடுகளாகின்றன.

(4) மாறும் காரணி உள்ளீடுகள் மாற்றமடைவதில்லை.

**1.5** 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு இணங்க, 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தலா வருமானம் :

(1) 3,604 அமெரிக்க டொலர் (2) 3,815 அமெரிக்க டொலர்.

(3) 4,082 அமெரிக்க டொலர். (4) 3,945 அமெரிக்க டொலர்.

**1.6** மொத்த வெளியீட்டின் அதிகரிப்பு, உள்ளீடுகளின் அதிகரிப்பை விட விகிதாசாரத்தில் குறைவாக இருப்பின், நிறுவனம் கீழ்வருவனவற்றுள் எதனை அனுபவிக்கும்?

(1) அதிகரிக்கின்ற அளவுத்திட்ட விளைவு. (2) குறைவடைகின்ற அளவுத்திட்ட விளைவு.

(3) குறைந்து செல்லும் எல்லை விளைவுகள். (4) மாறாத அளவுத்திட்ட விளைவு.

**1.7** கீழ்வருவனவற்றுள் தனியுரிமைப் (monopolistic) போட்டியின் ஒரு பண்பாக **அமையாதது** எது?

(1) தடையற்ற உள்நுழைவும் வெளியேறுகையும்.

(2) உற்பத்திக் காரணிகளின் பூரண நகர்வு.

(3) ஓரினப் பொருள்கள் காணப்படுதல்.

(4) நீண்ட காலத்திற்கு சாதாரண இலாபங்களைச் சம்பாதித்தல்.

**1.8** கீழ்வருவனவற்றுள் நுண்பாகப் பொருளியலில் உள்ளடக்கப்படும் ஒரு பகுதியாக இருப்பது எது?

(1) திரண்ட வெளியீடு (2) விலை மட்டம்.

(3) நுகர்வோரின் நடத்தை. (4) வேலை.

**1.9** கீழ்வருவனவற்றுள் திரட்டிய (consolidated) விரிந்த பண நிரம்பலில் **உள்ளடக்கப்படாதது** எது?

(1) பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயம்.

(2) பொதுமக்களால் வைத்திருக்கப்படும் கேள்வி வைப்புகள்.

(3) உள்நாட்டு வங்கியியல் அலகுகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்படுகின்ற கால மற்றும் சேமிப்பு வைப்புகள்.

(4) உரிமம் பெற்ற விசேடத்துவ வங்கிகளிலுள்ள கால மற்றும் சேமிப்பு வைப்புகள்.

**1.10** கீழ்வரும் கூற்றுக்களிலிருந்து சரியான கூற்றைத் தெரிவு செய்க :

(1) மொத்தப் பயனையும் எல்லைப் பயனையும் அளவிட முடியாது.

(2) மொத்தப் பயன் என்பது பொருளொன்றை நுகர்வதிலிருந்து நபர் ஒருவருக்குக் கிடைக்கப் பெறுகின்ற மேலதிக திருப்தி ஆகும்.

(3) மொத்தப் பயனை அதிகரிக்கும்போது, எல்லைப் பயன் எதிர்க்கணியமாகிறது (negative).

(4) மொத்தப் பயன் உயர்ந்தபட்சமாகும்போது எல்லைப் பயன் பூச்சியமாகிறது.

*இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** ……………… (சந்தை / திட்டமிட்ட) பொருளாதார முறைமை ஒன்றில் வளங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருக்கின்றன.

**1.12** ……………… (சராசரி உற்பத்தி / எல்லை உற்பத்தி) பூச்சியமாக ஆகும்போது, மொத்த உற்பத்தி அதியுச்ச நிலையை அடைகிறது.

*கீழே **1.13** மற்றும் **1.14** இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் குறிப்பிடுக..*

**1.13** இரண்டு சமபயன் (indifference) வளையிகள் ஒன்றையொன்று இடைவெட்டுகின்றன.

**1.14** குறுங்கால உற்பத்திச் செயன்முறையில், சராசரிக் கிரய வளையியின் இழிவுப் புள்ளியில், எல்லைக் கிரயம் (MC) சராசரிக் கிரயத்திற்கு (AC) சமனாக இருக்கிறது.

***1.15** தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக..*

**1.15** உற்பத்திக் காரணி என்ற ரீதியில், மூலதனத்தின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.16** அரசாங்கத்தின் பற்றாக்குறையான பாதீடு என்பதால் யாது கருதப்படுகிறது என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.17** அரசாங்கத்தால் விலைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

**1.18** பணத்திற்கான கேள்விக்கான இரண்டு (02) நோக்கங்களைக் (motives) குறிப்பிடுக.

**1.19** மொத்த உற்பத்தி (TP) மற்றும் சராசரி உற்பத்தி (AP) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.20** மனித அபிவிருத்தி வரைவாக்கத்தில் (Human development profile) உள்ள இரண்டு (02) உருப்படிகளை (items) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) “சந்தர்ப்பச் செலவு” என்னும் பதத்தை பொருத்தமான உதாரணத்துடன் **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள், கலப்புப் பொருளாதாரத்தினால் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) தனியுரிமை சந்தை ஒன்றின் மூன்று (03) பண்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) **பொருள் A** தொடர்பான கீழ்வரும் கேள்விச் சார்பும் (Qd) நிரம்பல் சார்பும் (Qs) தரப்பட்டுள்ளன :

$$Qd = 1{,}600 - 5p$$

$$Qs = -800 + 3p$$

மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி :

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**பொருள் A** இன் கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) சமநிலை விலை மற்றும் கணியம். (04 புள்ளிகள்)

(ii) நுகர்வோர் மிகை. (02 புள்ளிகள்)

(b) அரசாங்கமானது சமநிலை விலைக்கு மேல், பண்டமொன்றிற்கு குறைந்தபட்ச விலையொன்றை விதிப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளை (consequences) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) கேள்வி உதைப்பு (demand full) பணவீக்கம் மற்றும் கிரயத் தள்ளல் (cost push) பணவீக்கம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையின் இரண்டு (02) தரம்சார்ந்த (qualitative) கட்டுப்பாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) “நாடு எதிர்நோக்குகின்ற தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையை வெற்றிகொள்வதற்கு இலங்கை அதன் நாணயக் கொள்கையை இறுக்கமாக்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரைத்துள்ளது”.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு / குறைப்பதற்கு நாணயக் கொள்கை எவ்வாறு செல்வாக்குச் செலுத்த முடியுமென **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) **நாடு X** உம் **நாடு Y** உம் அரிசி மற்றும் கோதுமை ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்கின்றன. கீழ்வரும் அட்டவணையானது இரண்டு நாடுகளாலும் ஒரு கூலி அலகினால் உற்பத்தி செய்யப்படக் கூடிய அரிசி மற்றும் கோதுமை அலகுகளின் எண்ணிக்கையைக் காட்டுகிறது :

| பொருள் / நாடு | அரிசி (கிலோகிராம்) | கோதுமை (கிலோகிராம்) |
|---|---|---|
| X | 6 | 3 |
| Y | 2 | 4 |

ஒவ்வொரு பொருளினது உற்பத்தியிலும் எந்த நாடு ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை **விபரிக்குக.** *(கணிப்பீடுகளை ஆதாரமாகக் காட்டுக).* (04 புள்ளிகள்)

(b) அண்மையில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்தமைக்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(c) சர்வதேச வர்த்தகத்தின் இரண்டு (02) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | ரூபா மில்லியன் |
|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 1,000 |
| மொத்தத் தொழிற்பாட்டு மிகை | 1,400 |
| கலப்பு வருமானம் | 1,200 |
| ஏனைய வரிகள் கழித்த உற்பத்தி மீதான மானியங்கள் | 750 |
| வெளிநாட்டு முதன்மை வருமானக் கொடுப்பனவுகள் | 1,500 |
| வெளிநாட்டு முதன்மை வருமானப் பெறுவனவுகள் | 1,200 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான நிகர வரிகள் | 500 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வருமான அணுகுமுறையைப் பயன்படுத்தி, கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) – அடிப்படை விலையில் (05 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(iii) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாத மூன்று (03) உற்பத்திப் பொருளாதார நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) பேரினப் பொருளாதார நோக்கங்கள் என்ற வகையில், வருமானத்தின் நியாயமான பகிர்வு (fair distribution of income) மற்றும் பூரண தொழில் (full employment) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(C) நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கின்ற (determine) மூன்று (03) காரணிகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |